Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 02 2025

திங்கட்கிழமை 02, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 251 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE




## இன்று முதல் ‘தேசிய வரி வாரம்’

நாட்டின் வரி விவகாரங்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும் வரி தளத்தை விரிவுபடுத்தவும் திங்கட்கிழமை(02) முதல் ‘தேசிய வரி வாரம்’ அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியின் தொடக்க விழாவில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பங்குபற்றுவார்.

‘வரிகளின் மூலம் வலிமை’ என்ற கருப்பொருளில் வரி வாரம், சரியான நேரத்தில் வரி செலுத்துவதன் நன்மைகள் மற்றும் வரி செலுத்துவோர் அடையாள எண்ணை (TIN) பெறுவது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 2025 உலக அழகி ஓபல் சுச்சாட்டா






இந்தியாவின் ஹைதராபாத்தில் உள்ள HITEX மாநாட்டு மையத்தில், ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெற்ற விழாவில் தாய்லாந்தின் ஓபல் சுச்சாட்டா சுவாங்ஸ்ரீ 2025ஆம் ஆண்டுக்கான உலக அழகி பட்டத்தை வென்றார்.

உலக அழகி பட்டத்தை வென்ற ஓபல் சுச்சாட்டாவுக்கு கடந்த ஆண்டு பட்டத்தை வென்ற கிறிஸ்டினா பிஸ்கோவா மகுடம் சூட்டிப் பாராட்டினார்.

இவரது ஆடை ‘Opal For Her’ என்ற கருப்பொருளை மையமாக வைத்து உருவாக்கப்பட்டிருந்தது. இது அனைவரையும் ஈர்க்கும் வகையில் இருந்தது.

தொடர்ச்சி P2

# ‘கொவிட்’ தொற்றின் புதிய அலை

## சுகாதாரதுறை அறிவுறுத்தல்



NB 1.8.1 என அழைக்கப்படும் புதிய கொவிட்-19 மாறுபாடு, உலகளாவிய அளவில் மீண்டும் தொற்றுகள் ஏற்படுவதற்கு காரணமாகிறது என்று ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் துறையின் இயக்குநர் பேராசிரியர் சந்திம ஜீவந்தரா கூறினார்.

இது ஒமிக்ரானின் துணை வகை என்றும், உலக சுகாதார அமைப்பின் கண்காணிப்பின் கீழ் ஒரு மாறுபாடாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

புதிய மாறுபாடு முதன்முதலில் இந்த ஆண்டு ஜனவரியில் அடையாளம் காணப்பட்டது.

அப்போதிருந்து, இந்த மாறுபாடு பல நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது என்று சந்திம ஜீவந்தரா கூறினார்.

இந்த சூழ்நிலையில், பொதுமக்கள் முடிந்தவரை சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவது புத்திசாலித்தனம் என்று அவர் மேலும் கூறினார்.

## சிறுவர்களிடையே அதிகரிக்கும் டெங்கு, சிக்குன்குனியா

சிறுவர்களிடையே டெங்கு, சிக்குன்குனியா மற்றும் இன்ஃப்ளுயன்ஸா போன்ற நோய்கள் குறிப்பிடத்தக்க அளவில் சமீபத்திய வாரங்களில் அதிகரித்து வருவதாக லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை (LRH) ஆலோசகர் குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நுளம்புகளால் பரவும் நோய்கள் அதிகரிப்பதற்கு சமீபத்திய பாதகமான வானிலை நிலைமைகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பரவலைத் தடுக்க, தங்கள் வீடுகளிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நுளம்புகள் பெருகும் இடங்களை அழிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## 170க்கு வர்த்தமானி வெளியாகவில்லை

நாட்டில் உள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களில், 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பு, மே 06ஆம் திகதி நடைபெற்றது. அந்த உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றியீட்டிய மற்றும் நியமனம் பெற்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சனிக்கிழமை (31) வெளியிடப்பட்டன.

மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர், தவிசாளர், துணைத் தவிசாளர் ஆகியோரின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானியும் வெளியிடப்பட்டது.

தொடர்ச்சி P2

## லாஃப்ஸ், எரிபொருள் விலையில் மாற்றமில்லை

லாஃப் வீட்டு எரிவாயு சிலிண்டர் நிரப்புதலுக்கான விலை திருத்தம் ஜூன் மாதத்தில்இருக்காது என்று லாஃப்ஸ் எரிவாயு இயக்குநரும் கிளஸ்டரின் தலைமை நிர்வாக அதிகாரியுமான டாக்டர் நிரோஷன் ஜே.பீரிஸ், ஞாயிற்றுக்கிழமை (01) அன்று தெரிவித்தார்.

இதேவேளை, மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்திற்கு ஏற்ப இம்முறை இந்தமுறை மாதாந்திர எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம், சனிக்கிழமை (31) தெரிவித்திருந்தது.

## தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கிளிநொச்சியில் சத்தியப்பிரமாணம்



கரைச்சி, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையில் ஞாயிற்றுக்கிழமை (01) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தொடர்ச்சி P2

## “யாழில் சில சபைகளில் தே.ம.ச. ஆட்சி அமைக்கும்”

“தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது புலம்பெயர் வாழ் இலங்கையர்களுக்கு நம்பிக்கை உள்ளது. எனவே, சில தீய சக்திகளால் பரப்பப்படும் கதைகளை அவர்கள் நம்பமாட்டார்கள்” என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்குத் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் உறுதியுரையேற்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் சனிக்கிழமை (31) நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ச்சி P2

### கிளிநொச்சி பொது வைத்தியசாலை

## கிணற்று நீரில் மல தொற்று

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை கிணற்று நீரில் மல தொற்று இருப்பது மே 11ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டு தற்போது தொற்று நீக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## “உகந்தமலையில் புத்தர் சிலை இல்லை”

### கோடீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

■ வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கு சொந்தமான ஏழு ஏக்கர் பரப்பில் எந்த ஒரு புத்தர் சிலையும் வைக்கப்படவில்லை. யாரும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அவிசாவளை இளைஞன் மீது கள உத்தியோகத்தர்கள் தாக்குதல்

### பிரதியமைச்சர் பிரதீப் நடவடிக்கை: மனோவும் வலியுறுத்து

அவிசாவளை-எலிஸ்டன் தோட்ட இளைஞர் ஒருவர், தோட்ட கள உத்தியோகத்தர்கள் இருவரினால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் தொடர்பில் பிரதி அமைச்சரின் பிரதிநிதிகள் கவனம் செலுத்தியதுடன் சம்பவம் நடைபெற்ற தினத்திலிருந்து கட்டம் கட்டமாகப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

பெருந்தோட்டம் மற்றும் சமூக உட் கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீபின் அறிவுறுத்தலுக்கு அமைய,

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரிய ஆராச்சி, தலைமையில் சீதாவாக்க பிரதேச சபை உறுப்பினர் சேரலி வீரசிங்க, பிரேம்நாத் ஜயரத்ன, பாலித்த பால சூரிய,



விஜயகுமார் கமல் (ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் சம்பவம் இடம் பெற்ற தோட்டத்திற்கு சனிக்கிழமை (31) சென்று பாதிக்கப்பட்ட இளைஞன், அவருடைய பெற்றோர்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தோட்ட முகாமைத்துவம், அவிசாவளை பொலிஸ் நிலைய



பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசிய நிலையில் இனி வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாத வண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

அத்துடன், மனித உரிமை ஆணைக்குழு, அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கும் சமூக அமைப்புகள் போன்றவற்றுடன் கலந்துரையாடி அதற்கான உரிய தீர்வு எட்டபடுவதற்கான நகர்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 2025 உலக அழகி ஓபல் சுச்சாட்டா

அவருடன் முதல் நான்கு கண்ட விருதுகளில் மிஸ் மார்ட்டினிக் - ஆரேலி ஜோச்சிம் (கரீபியன்), மிஸ் எத்தியோப்பியா - ஹாசெட் டெரெஜ் அட்மாசு (ஆப்பிரிக்கா), மற்றும் மிஸ் போலந்து - மாஜா கிளாஜ்டா (ஐரோப்பா) ஆகியோர் இணைந்தனர்.

இந்த நான்கு பேரும் இறுதிப் போட்டியாளர்களில் தங்கள் இடங்களைப் பிடித்தனர். சர்வதேச அரங்கில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் தற்போதைய மிஸ் வேர்ல்ட் இலங்கை அழகி அனுதி குணசேகரா.

அனுதி குணசேகரா, விளையாட்டு சவால், திறமை சவால், நேரடி சவால், சிறந்த மாடல் போட்டி, மல்டிமீடியா சவால் மற்றும் அழகு நோக்கத்துடன் கூடிய பிரிவு உள்ளிட்ட பல விரைவான நிகழ்வுகளில் பங்கேற்றார்.

இந்த ஆண்டு மிஸ் வேர்ல்ட் போட்டியில் 100க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.



ஓபல் சுச்சாட்டா 2003ஆம் ஆண்டு பிறந்தவர்.

தாய், சைனீஸ் மற்றும் ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளில் உரையாடத் திறமை உள்ளது. 16 வயதிலேயே மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுத் தொடக்க நிலையிலேயே அடையாளம் கண்டு அதற்கான சிகிச்சையை எடுத்துக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# இன்று முதல் 'தேசிய வரி வாரம்'

ஒரு தனிநபரின் பெயரில் ஒரு வாகனத்தைப் பதிவு செய்வதற்கு ஏற்கனவே TIN தேவைப்படுகிறது, மேலும் சில வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும் இது தேவைப்படும்.

உள்நாட்டு வருவாய்த் துறை (IRD), மோட்டார் போக்குவரத்துத் துறை (MTD), இலங்கை சுங்கம் மற்றும் கலால் துறைகள் வரி வாரத்தில் பல்வேறு வரிகள் மற்றும் வரிகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்க பல்வேறு திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன.

# சிறுவர்களிடையே அதிகரிக்கும் டெங்கு, சிக்குன்குனியா

"டெங்கு மற்றும் சிக்குன்குனியாவின் அறிகுறிகளைக் கொண்ட குழந்தைகள் ஏற்கனவே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்," என்று டாக்டர் பெரேரா கூறினார், டெங்கு ஆபத்தானது என்றாலும், சிக்குன்குனியா பெரும்பாலும் நோயாளிகளை மாதக்கணக்கில் நீடிக்கும் நீண்டகால மூட்டு வலியால் அவதிப்பட வைக்கிறது.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வயதானவர்களுக்கு கடுமையான உடல்நல அபாயங்களை சிக்குன்குனியா ஏற்படுத்தக்கூடும் என்று டாக்டர் பெரேரா மேலும் எச்சரித்தார். கர்ப்ப காலத்தில் ஏற்படும் தொற்றுகள் பிறக்காத குழந்தையைப் பாதிக்கக்கூடும் என்று அவர் மேலும் கூறினார்.

நுளம்புகளால் பரவும் நோய்களுக்கு மேலதிகமாக, இன்ஃப்ளூயன்ஸா எண்ணிக்கையின் அதிகரிப்பையும் டாக்டர் பெரேரா எடுத்துரைத்தார், இது குழந்தைகளிடையே வேகமாகப் பரவக்கூடும் என்று அவர் குறிப்பிட்டார். பெற்றோர்களும் பாதுகாவலர்களும் விழிப்புடன் இருக்கவும், சரியான நேரத்தில் மருத்துவ உதவியை நாடவும், பரவலைத் தடுக்க சரியான சுகாதாரத்தை உறுதி செய்யவும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை வானிலை மற்றும் பருவகால முறைகளுடன் தொடர்புடைய குழந்தை தொற்றுகளின் அதிகரிப்பை எதிர்கொள்வதால், பொது விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை மருத்துவ சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

# தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கிளிநொச்சியில் சத்தியப்பிரமாணம்

பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவருமான சிவஞானம் சிறீதரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவரும் ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளருமான கிருஷ்ணபிள்ளை சின்னராஜா, ஓய்வுநிலை அதிபரும் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினருமான நாகலிங்கம் சோதிநாதன் ஆகியோர் முன்னிலையில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின்

# 44ஆவது ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின் 44 ஆவது ஆண்டு நினைவேந்தல், யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்றது.

நினைவேந்தலின்போது யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை உருவாக்குவதற்குக் காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பா மற்றும் யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

1981 மே 31 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நடந்துகொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவனங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

அன்று கொளுத்தப்பட்ட வன்முறைத் தீ மறுநாளும் கொழுந்துவிட்டு எரிந்தது; ஜூன் முதலாம் திகதியும் இரவு யாழ்ப்பாணத்திலிருந்த கடைகள் பலவும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

அன்று முழுவதும் நிலவிய பதற்றச் சூழலை இந்தச் சம்பவம் மேலும் தீவிரப்படுத்தியது; அதைத் தொடர்ந்துதான் அந்த வரலாற்றுக் கொடுமை அரங்கேறியது.












# "யாழில் சில சபைகளில் தே.ம.ச. ஆட்சி அமைக்கும்"



அவர் மேலும் கூறுகையில்,

"இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய அகதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து இந்தியாவில் இருந்து வருபவர்களை அனுர அரசாங்கம் கைது செய்கிறது என சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். அவரை அரசாங்கம் கைது செய்யவில்லை. இது விடயத்தில் உடனடியாக தலையிடப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த நபருக்குப் பிணை வழங்கப்பட வேண்டும் எனவும், பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கக்கூடாது எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் இந்நாடு கட்டியெழுப்பப்படாவிட்டால் இலங்கைக்கு விமோசனம் கிடையாது என்பதே புலம்பெயர் தமிழர்களின் கருத்தாக உள்ளது.

தீய குணம் படைத்த தீய நோக்கத்துடன் செயற்படும்; அரசியல் சக்திகள் உள்ளன. அந்த தீய சக்திகளைச் சுத்தப்படுத்த வேண்டும். அதனை நாம் செய்ய வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் சிறப்பாகச் செயற்பட வேண்டும். யாழ்.மாவட்டத்தில் சில சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும். அதேவேளை, மேலும் சில சபைகளில் எதிர்க்கட்சி தலைவராகக்கூட சிறப்பாக செயற்பட முடியும்" என்றார்

# 170க்கு வர்த்தமானி வெளியாகவில்லை

கொழும்பு மாநகர சபை உட்பட 170க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்கள் இன்னும் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை.

பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்படாத பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிணற்று நீரில் மல தொற்று

வைத்தியசாலை வளாகத்தில் உள்ள கிணற்று நீர் வைத்தியசாலையின் அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குடிநீருக்கும் இந்த பெறப்பட்டு வைத்தியசாலைக்குள் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம்

சுத்திகரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. ஏனைய தேவைகளுக்கு நேரடியாக குறித்த கிணற்று நீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நீரில் ஒரு சில நாட்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் மல தொற்று (ஈகோலி) இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மல தொற்று நீக்கியாக குளோரின் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில்

வைத்தியசாலையில் கிணற்றில் காணப்படும் மல தொற்று கிருமிகளை நீக்க

செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை நகரையும் நகரை அண்டிய பிரதேசங்களிலும் பெரும்பாலான கிணறுகளில் மல தொற்று காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்டத்தின் நகரையும் நகரை அண்டிய பகுதிகளில் பொதுக் கிணறுகள் உள்ளிட்ட சில கிணறுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி பல கிணறுகளில் மல தொற்று இருப்பது கண்டறியப்பட்டு இருந்தது.

# அவிசாவளை இளைஞன் மீது கள உத்தியோகத்தர்கள் தாக்குதல்

"ஆலய சிலை பீடத்தில் பாதணியுடன் நடமாட வேண்டாம்" என்று சொன்ன, கமலநாதன் என்ற தமிழ் இளைஞரை, "நீ கும்பிடறது, சிலையின் தலையா? காலையாடா? உங்கட சாமி தலையிலயாடா காலை வைத்தோம்" என கொச்சை தமிழில் திட்டி, அனுர, சந்துன் என்ற இரு, தோட்ட வெளிக்கள அலுவலர்கள் தாக்கியுள்ளனர்.

இதுபற்றி மேல் நடவடிக்கை எடுக்கும்படி அவிசாவளை பொலிஸூக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரத்ன, பொறுப்பதிகாரி ஜயலத், இளநிலை அதிகாரி ராஜரத்ன ஆகியோரிடம் கடுமையாக வலியுறுத்தி உள்ளேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது போன்ற சம்பவங்கள் கடந்த மூன்று மாதங்களில் மாத்தறை, காலி, இரத்தினபுரி, களுத்துறை பகுதிகளில் நடைபெற்றன. இப்போது கொழும்பு அவிசாவளை. அனைத்திலும் நான் தலையிட்டு பாராளுமன்றத்திலும் முன் வைப்பேன் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.





# "உகந்தமலையில் புத்தர் சிலை இல்லை"

உகந்தமலை புத்தர் சிலை விவகாரம் ஊடகங்களில் வைரலாக எரிந்து வருகையில், இதுவரை மௌனம் சாதித்து வந்த அந்த மாவட்டத்திற்குரிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், முதல் தடவையாக வாய் திறந்திருக்கிறார்..

அவரிடம் இவ்விவகாரம் பற்றி சனிக்கிழமை (31) கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர்தெரிவிக்கையில். இந்த விடயம் எனக்கு மக்களால் தெரிவிக்கப்பட்டது. இது உணர்வுப்பூர்வமான விடயம். கவனமாகக் கையாள வேண்டும் என்பதற்காக இதுவரை நான் ஒரு கருத்தும் கூறவில்லை.

இன்று நான் அங்கு நேரடியாகச் சென்றேன். அங்கு ஆலய குருக்கள் முதல் வண்ணக்கர் வரை சந்தித்துக் கலந்துரையாடினேன்.

விளக்கம் கிடைத்தது. அதாவது குறித்த சிலை உகந்தமலை சூழலில் வைக்கப்படவில்லை என்பது மாறாக, உகந்த மலைக்கு அப்பால் கடற்கரைச் சூழலில் உள்ள மலை ஒன்றில் புத்தர் சிலை நிறுவப்பட்டு உள்ளது. அது அண்மையில் நிறுவப்படவில்லை. பல மாதங்களுக்கு முன்பே நிறுவப்பட்டது.அப்போது இந்த அறிக்கை வெளியிடும் சமூக செயற்பாட்டாளர்கள் எங்கே? இருந்தார்களோ தெரியாது. நிற்க, அதோடு ஒட்டியதாகப் பௌத்த கொடியும் பறக்க விடப்பட்டுள்ளது என்பதை நேரடியாக அறிந்தேன்.

வருடாந்தம் முருகப் பெருமான் தீர்த்தமாடுகின்ற கடற்கரைச் சூழலில் கடற்படை முகாமுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. அச் சூழலில் மீன் வாடிகளும் உள்ளன. பெரும்பான்மையின மீனவர்கள் உள்ளனர்.

ஆனால், இதனை சில ஊடகங்களும் சமூக செயற்பாட்டாளர்கள் அரசியல்வாதிகள் என்று தங்களைக் கூறிக்கொள்வோர் சிலரும் முண்டியடித்துக்கொண்டு வழமைபோல் அறிக்கை வெளியிட்டனர். அவ்வளவு தான். "உகந்தமலையில் நாங்கள் முருகன் சிலை ஒன்றை நிறுவ முற்பட்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், அதே சூழலில் இப் புத்தர் சிலை எவ்வாறு நிறுவப்பட்டது? என்று மக்கள் கோருகின்றனரே? கதிர்காமம் போல் உகந்தையையும் மாற்றத் திட்டமிட்ட சதி நடக்கிறது? என்று மக்கள் கேட்கின்றனரே?"

இதற்கு என்ன சொல்கிறீர்கள்? என்று எமது ஊடகவியலாளர் கேட்டதற்கு அவர் பின்வருமாறு கூறினார்.

உகந்தமலையில் வள்ளியம்மன் மலையில் கடந்த காலத்தில் முருகன் சிலை அமைப்பதற்கு முயற்சி செய்த போது அதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தடை செய்தது உண்மைதான்.

அதற்கு அதே மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டு இருப்பதாகக் கூறுவது பொய். அபத்தம் கதிர்காமத்தைப் போல் உகந்தையையும் மாற்ற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றார்.




# ‘மலையக வானவில் பெருமிதம்’

ரஞ்சித் ராஜபக்ஷ

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தன்பாலினத்தவர் சமூகத்தினரின் உரிமைகளைக் கோரி ஹட்டன் நகரில் ஞாயிற்றுக்கிழமை (01) அன்று பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பேரணியைப் பல அரச சாரா அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

ஹட்டன் பேருந்து நிலையத்திற்கு அருகில் ஆரம்பமாகிய பேரணி, ஹட்டன் – டிக்கோயா நகரசபை மண்டபம் வரை வந்ததுடன், பேரணியில் இணைந்த, தன்பாலினத்தவர் சமூகத்தின் உறுப்பினர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் ஹட்டன் நகரசபை மண்டபத்தில் பல்வேறு நிகழ்வுகளை நடத்தினர்.

“மலையக வானவில் பெருமிதம்” என்று பெயரிடப்பட்ட இந்த பேரணி, தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தன் பாலின உறவாளர்களின் உரிமைகளை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாகப் பேரணி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.





















# மழையால் மரங்கள் வேருடன் சாய்ந்தன

பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்தில் கடும் காற்றுடன் பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், நானுஓயா வங்கி ஓயா கீழ் பிரிவில் குடியிருப்பொன்றின் மீது மரம் ஒன்று வேரோடு சாய்ந்ததன் காரணமாக அக் குடியிருப்பு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும், தலவாக்கலை கொரீன் தோட்டத்தில் 200 வருடம் பழமை வாய்ந்த மரம் ஒன்று வேரோடு சாய்ந்து விழுந்துள்ளது. தலவாக்கலை ஹொலிரூட் கீழ் பிரிவில் குடியிருப்பொன்றின் மீது கித்துள் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் குடியிருப்பு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. குடியிருப்புக்குள் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

அத்துடன், தலவாக்கலை ட்ரூப் தோட்டத்தில் வீதியோரமாக வளர்ந்திருந்த கருப்பந்தேயிலை மரங்கள் வேருடன் முறிந்தும் வீழ்ந்துள்ளமையால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டதோடு மரங்களை வெட்டி வீதியை சீர் செய்யும் நடவடிக்கைகளில் தோட்ட நிர்வாகமும் பொதுமக்களும் ஈடுபட்டுள்ளனர்.



# அங்காடியில் தீ பரவல்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி நகரில் அமைந்துள்ள வர்த்தக அங்காடி ஒன்றில் சனிக்கிழமை (31) அன்று தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்த தீ பரவல் காரணமாக வர்த்தக நிலையம் முற்றாக எரிந்துள்ளதுடன், இதனால் இரண்டு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு மாநகர சபை தீயணைக்கும் படையினர் காத்தான்குடி நகரசபை தீயணைப்பு படையினர் குறித்த இடத்திற்கு வந்து பொது மக்களின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீயை அணைக்க களத்தில் நின்று பாடுபட்ட நான்கு இளைஞர்கள் மூச்சுத்திணறல் காரணமாக காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், அதில் இருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



# சில்லில் தலை நசுங்கி மனைவி பலி; கணவன் படுகாயம்



ஹம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று, தம்பதியினர் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் மனைவி உயிரிழந்ததாகவும், கணவர் படுகாயமடைந்ததாகவும் பயாகலை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர், மஹாவில, மஹவத்த, ஹபுருகல பகுதியைச் சேர்ந்த சி.சுசிலாவதி என்ற பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பேருவளையில் இருந்து களுத்துறை நோக்கி ஞாயிற்றுக்கிழமை (01) காலை மோட்டார் சைக்கிளில் தம்பதியினர் பயணித்துள்ளனர்.

அதே திசையில் பயணித்த பேருந்து, மோட்டார் சைக்கிளில் மோதியதில், பெண்ணின் தலை முன் இடது சக்கரத்தின் கீழ் நசுங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மாதாந்த மகப்பேறு சிகிச்சை மையம் ஆரம்பம்

எம்.யூ.எம்.சனூண்

கற்பிட்டி முகத்துவார கிராம மக்களின் நீண்ட கால தேவையாக காணப்பட்ட மகப்பேறு சிகிச்சை சேவை கற்பிட்டியின் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கற்பிட்டி பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.ஆர்.எம்.முஸம்மிலின் முயற்சியின் பலனாக கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி தம்மசிரியின் ஏற்பாட்டில் இம்மாதம் 17ஆம் திகதி முதல் மாதாந்தம் மகப்பேறு சிகிச்சை சேவையை நடத்துவதற்கான வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேற்பார்வை மற்றும் விசேட கலந்துரையாடல் முகத்துவாரம் பாலர் பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை (29) அன்று இடம்பெற்றுள்ளது.

இதில் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம்.முஸம்மில், கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி எம்.முர்ஷிதா, பொது சுகாதார பரிசோதகர் எம்.சப்ரீன், கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் அதிகாரிகள் உட்பட ஊர் பிரமுகர்களும் கலந்து கொண்டுள்ளனர்.



# ஊடகவியலாளருக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்





பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 21ஆவது நினைவேந்தல் மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளருக்கான நீதி கோரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத் தூபி முன்பு சனிக்கிழமை (31) மாலை நடைபெற்றது.

கடந்த 2024 மே மாதம் 31ஆம் திகதி காலை நாட்டுப்பற்றாளர் நடேசன் மட்டக்களப்பிலுள்ள தனது வீட்டிலிருந்து அலுவலகம் நோக்கி தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மட்டக்களப்பு எல்லை வீதியில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். அவரது படுகொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை நீதியான விசாரணை செய்து குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம் மற்றும் வடக்கு கிழக்கு தெற்கு ஊடக அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட நடேசனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதையடுத்து, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி கோரி தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம், திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை தொழில்சார் ஊடகவியலாளர் அமைப்பு, இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# கைவரிசையை காட்டியவர் சிக்கினார்

எப்.முபாரக்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடந்த சில நாட்களாகத் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் துறைமுக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர், வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் சிற்றூழியர் போன்ற சீருடை அணிந்து நோயாளர்களின் கையடக்க தொலைபேசிகள் மற்றும் பணம் போன்றவற்றை ஏமாற்றி கொள்ளையடித்து வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் துறைமுக பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளை அடுத்து திருகோணமலை நகரிலுள்ள கடையொன்றுக்குச் சென்று கையடக்க தொலைபேசிகளை விற்பனை செய்வதற்காகப் பேசிக் கொண்டிருக்கும் போது பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# பொலிஸாரை தாக்க முயன்றவர் மீது துப்பாக்கிச் சூடு

சுமனசிறி குணதிலக

வெல்லவாய பொலிஸ் பிரிவின் கோன்வெலன பகுதிக்கு வெள்ளிக்கிழமை(30) அன்று சென்ற பொலிஸ் அதிகாரிகள் குழுவை சந்தேக நபர் ஒருவர் கத்தியால் தாக்க முயன்ற போது, பொலிஸார் சந்தேக நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

உப பொலிஸ் பரிசோதகர் பிரேமசிறி உள்ளிட்ட அதிகாரிகள் குழு, முச்சக்கர வண்டியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது, கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகளுக்குத் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரைக் கைது செய்ய கோன்வெலன பகுதியில் உள்ள புது மெதுர சந்திக்குச் சென்றுள்ளனர்.

குறித்த இடத்தில் இருந்து சந்தேக நபரைக் கைது செய்யச் சென்ற போது, சந்தேக நபர் ஆக்ரோஷமாக நடந்து கொண்டு, கத்தியால் பொலிஸ் அதிகாரிகளைத் தாக்க முயன்றுள்ளார்.

அவ்வாறு செய்ய வேண்டாம் என உப பொலிஸ் பரிசோதகர் கூறியபோதும் அவர் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதால், சந்தேக நபரின் கால் மீது துப்பாக்கி சூடு நடத்தியுள்ளார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து கத்தி, 2750 மில்லிகிராம் ஐஸ், 16 மில்லி கிராம் ஹெராயின், மக்கள் வங்கியில் இருந்து 29,000 ரூபாய் மற்றும் 1,000 ரூபாய்க்கான 02 ரசீதுகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் கூலி வேலையில் ஈடுபட்டு வரும் வெல்லவாய, மஹவெலமுல்ல கங்க வீதியைச் சேர்ந்த 37 வயதுடையவராவர்.

# வீதியில் குடை சாய்ந்த லொறி



.எம்.எம்.பர்ஸான்

பொருட்களை ஏற்றி வந்த லொறியொன்று பொலன்னறுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லெல பிரதான வீதியில் சனிக்கிழமை (31) காலை குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - கொழும்பு வீதியூடாக பொருட்களை ஏற்றிச் சென்ற லொறியொன்றே இவ்வாறு வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்,விபத்தில் லொறியை செலுத்திச் சென்ற சாரதி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலன்னறுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி 2025 மே மாதம் 21 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பழைய பெயர்:** கிரீன்பவர் எஸ்எல் (பிரைவேட்) லிமிடெட்
**கம்பனியின் புதிய பெயர்:** கிரீன்பவர் எஸ்எல் மேனேஜ்மென்ட் (பிரைவேட்) லிமிடெட்
**கம்பனியின் இலக்கம்:** பிவி 00324758
**பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி:** இல. நிலை 12, வன் கோல்வேஸ் டவர், 1ஏ சென்டர் வீதி, கொழும்பு 2

**கம்பனி செயலாளர்கள்**
**கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்**

# எந்த பாகுபாடும் இல்லாமல் டெங்கு கொன்றுவிடும்

டெங்கு மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளது. டெங்கு இறப்புகள் பற்றிய ஊடக அறிக்கைகள் சில நேரங்களில் சமூகத்திற்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. டெங்கு அதிக தொற்றுநோய் நிலையை அடையும் போது, அது சமூகத்தில் ஏற்படுத்தும் கொந்தளிப்பை இவ்வளவு பெரியது என்று சொல்ல முடியாது. மீண்டும், சமூகம் அத்தகைய ஒரு தருணத்தில் நுழைகிறது.

டெங்குவை எதிர்த்துப் போராடுவதற்காக அரசாங்கம் டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தைச் செயல்படுத்தியுள்ளது. வீடுகள், பணியிடங்களை ஆய்வு செய்து நுளம்பு இனப்பெருக்கத்தைக் குறைக்கத் திட்டங்கள் தயாரிக்கப்படும் என்று கூறப்பட்டது.

முன்னர் பல முறை வலியுறுத்தியபடி, இந்த கட்டுப்பாட்டு வாரங்கள் அல்லது மாதங்களில் மட்டும் அறிவிப்பதன் மூலம் வெற்றியை அடைய முடியாது.

நுளம்புகள் உட்பட பூச்சிகளால் பரவும் பல நோய்கள் உலகம் முழுவதும் உள்ளன, மேலும் அவற்றில் சில தொற்றுநோய்கள் போல பரவுகின்றன. அவை முற்றிலுமாக அகற்றப்படக்கூடியவை அல்ல, மேலும் கட்டுப்பாட்டு செயல்முறை மேற்கொள்ளப்பட வேண்டும். பொது நடவடிக்கைகள், தொழில்நுட்ப திட்டங்கள் மற்றும் மருத்துவ அறிவியல் திட்டங்கள் மூலம் அவை தயாரிக்கப்பட வேண்டும்.

பொதுமக்கள் பங்கேற்பு அல்லது சமூக அடிப்படையிலான செயல்பாடுகள் அடங்கும். எளிமையாகச் சொன்னால், நுளம்பு கட்டுப்பாட்டு செயல்முறை மற்றும் சுகாதாரம், அரசாங்கம், சுகாதார அதிகாரிகள் மற்றும் மக்களின் கூட்டு நடவடிக்கையாக மாற்றப்பட்டது.

மருத்துவ மற்றும் அறிவியல் முறைகளை சமூக நடவடிக்கைகளுடன் இணைத்தது. நுளம்பு கட்டுப்பாட்டு செயல்முறைக்கு நாட்கள், வாரங்கள் மற்றும் மாதங்கள் கூட்டு நடவடிக்கை தேவை என்பதை நாங்கள் பரிந்துரைக்கிறோம். இது பாடசாலை பாடத்திட்டத்திலிருந்து பரந்த பொது முயற்சியாக விரிவுபடுத்தப்பட வேண்டும்.

நுளம்பு கட்டுப்பாட்டு செயல்முறையில் சமூகம், மருத்துவ சேவைகள், தொடர்புடைய கள அதிகாரிகள், தொழில்நுட்பக் குழுக்கள், சுகாதார அமைச்சகம், கல்வி அமைச்சகம், மருத்துவமனைகள், மகளிர் சங்கங்கள், சிவில் அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள், சிவில் மற்றும் பாதுகாப்புப் படைகள் மற்றும் ஊடகங்கள் உட்பட அனைத்துத் துறைகளின் கூட்டுப் பொறுப்பும் இருக்க வேண்டும். எளிமையான சொற்களில், சமூக நெருக்கடிகளைத் தீர்ப்பதில் அரசின் தலையீடு இருக்க வேண்டும், ஆனால் அதற்கு சமூகத்தின் தீவிர பங்கேற்பும் அவசியம். இல்லையெனில், நாம் வேறொரு தரப்பினரை நோக்கி விரல் நீட்டி நம்மைக் காப்பாற்றிக் கொள்வோம். டெங்கு என்பது ஒரு வைரஸால் பரவும் ஒரு நோய். நுளம்பு தான் நோயைப் பரப்புகிறது. இங்கு செய்ய வேண்டியது நோய் பரப்பும் கொசுவைக் கட்டுப்படுத்துவதாகும்.

ஒரு நுளம்பு சமூக நடவடிக்கைகளைக் கையாள அனுமதிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. எனவே, இந்த நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்திலிருந்து இதற்கான ஒரு முறையான தேசிய திட்டத்தைத் தயாரிப்பது அவசியம். முந்தைய டெங்கு கட்டுப்பாட்டு வார நிகழ்ச்சிகள் மற்றும் பட்டறைகளை விட இது மிகவும் நடைமுறைக்குரியதாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இல்லையெனில், டெங்கு இறப்புகளின் அதிர்ச்சியை சமூகம் மட்டுமே தாங்க வேண்டியிருக்கும். பொதுச் சமூகத்தின் மக்கள் எந்த சமூக பாகுபாடும் இல்லாமல் அதன் விளைவுகளை அனுபவிப்பார்கள். ஏழைகள் மற்றும் பணக்காரர்கள், படித்தவர்கள் மற்றும் படிப்பறிவற்றவர்கள் என்ற பாகுபாடு இருக்காது. டெங்கு கொசு எந்த பாகுபாடும் இல்லாமல் அவர்களைக் கொன்றுவிடும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாக சம்பவித்து விடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டு விடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# இலங்கை அரசின் உண்மை முகம்

**லக்ஸ்மன்**

கனடாவில் மே மாதத்தில் நடைபெற்ற இரண்டு விடயங்கள் தமிழ் மக்களை மகிழ்வடையச் செய்துள்ளதுடன், இலங்கை அரசாங்கத்தையும் பேரினவாதத் தரப்பினரையும் சினமும் பீதியுமடையச் செய்திருக்கின்றன. அதிலொன்று கனடா பிரம்டன் நகரிலுள்ள சிங்காவுசி பூங்காவில் திறந்து வைக்கப்பட்ட தமிழின அழிப்பு நினைவுத்தூபி, தமிழின அழிப்பு நினைவகம். மற்றையது கனடாவின் டொரென்ரோவின் ஈழத் தமிழர்கள் அதிகம் வாழும் ஸ்காப்ரோ நகரில் தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபி அமைப்பதற்கான தீர்மானம். அதேநேரம், இந்நடவடிக்கையானது ஏனைய புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் தமிழினப்படுகொலை நினைவுத்தூபிகள் அமைக்கப்படலாம் என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கியே தமிழர்கள் தொடர்ச்சியாக பல்வேறு வகைகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆயுத யுத்தம் தொடங்கப்பட்ட காலம் முதல் வடக்கு தமிழர் தாயகப் பகுதியில் இலங்கை அரசினாலும் அதன் இராணுவத்தினாலும் நடத்தப்பட்டது இனப்படுகொலைதான் என்பதனை நிரூபிப்பதற்கான முயற்சிகள் அதில் ஒன்றாகும். வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், புலம்பெயர் நாடுகளில் இருக்கின்ற தமிழர்கள் மற்றும் தமிழர்களுக்காகச் செயற்படுகின்ற அமைப்புகள் இதனைச் செய்துவருகின்றனர்.

இறுதி யுத்த காலப்பகுதியை மாத்திரமல்ல, போர் நடந்த காலங்களிலும் இலங்கை அரசு இனப்படுகொலையைச் செய்திருக்கிறது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படாதிருந்தாலும், சில நாடுகள் அதனை ஏற்றுக்கொண்டு வருகின்றன. இதில் ஒரு படிதான், இவ்வாறான உலக நாடுகளுக்கு முன்மாதிரியாக அமைந்ததுதான் கனடாவின் செயற்பாடு. அந்தவகையில்தான், தமிழ்த்தேசிய இனம் மீது, இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட மனிதப் பேரவலத்தை இனப் படுகொலையாக என்று ஏற்றுக்கொண்ட முதலாவது நாடாக கனடா அமைந்திருக்கிறது.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வடக்கு கிழக்கில் இடம்பெற்ற ஆயுதப் போரின் 2009 மே 18 முடிவு, இலங்கையின் வடக்கு, கிழக்கில் இனப்படுகொலை, முள்ளிவாய்க்கால் நினைவாகத் தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்நாளை தெற்கில் போர் வெற்றிக் கொண்டாட்டமாக இலங்கை அரசாங்கமும் சிங்களப் பெரும்பான்மை மக்களும் மகிழ்ந்து கொள்வது மிகக் கவலையானது. அந்தவகையில்தான், சொந்த நாட்டு மக்களையே கொன்றொழித்ததனை போர் வெற்றிக் கொண்டாட்டமாக யாரும் கொள்ளமாட்டார்கள். அப்படியானால் இது மற்றொரு நாடு மீதான போர் என்றே இருக்கலாம் என்று சந்தேகிக்கத் தோன்றும்.

இது, இலங்கையின் தமிழர் தாயகப்பகுதியில் இலங்கை அரசினாலும் இராணுவத்தினாலும் மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை என்ற தீர்மானத்திற்கு கனடா வருவதற்குக் காரணமாகும். கனடாவின் இந்த முடிவு ஏனைய உலக நாடுகளுக்கு இந்த தீர்மானம்மிக்க முடிவுக்கு வருவதற்கு ஏதுக்களை அதிகரித்திருக்கிறது.

மிக முக்கியமாகக் கடந்த 11ஆம் திகதி தமிழின அழிப்பு நினைவுத்தூபி, தமிழின அழிப்பு நினைவகம் என்ற பெயரில் கனடா பிரம்டன் நகரிலுள்ள சிங்காவுசி பூங்காவில் நகர மேயர் பற்றிக் பிரவுணால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டமை பல்வேறு அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது. மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு நாளை தமிழ் மக்கள் அனுஷ்டிக்கத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில், இந்த நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்க விடயமாகப் பார்க்கப்படுகிறது.

பிரம்டன் நகரில் நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டபோது, பல நகர மேயர்கள் மற்றும் அரசியல்வாதிகளும் கலந்து கொண்டுள்ளனர். 2021ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கம், வெளிவிவகார அமைச்சு மற்றும் கனடாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் கொன்சியுலர் காரியாலயம் ஆகியன இந்த நினைவுத்தூபி அமைப்பிற்கு எதிர்ப்பை தெரிவித்து வந்துள்ளன. இதில் மற்றொரு முக்கிய விடயம் என்னவென்றால், இராஜதந்திர மட்டத்தில் தலையீடு செய்துள்ள போதும் நிறுவப்பட்டமைதான்.

கனடாவின் இந்தச் செயற்பாடானது இலங்கை அரசாங்கத்திற்கும், பேரினவாதிகளுக்கும் பெரும் இடியாக அமைந்திருக்கிறது என்பது இலங்கையின் வெளிநாட்டமைச்சரின் நடவடிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தமது எதிர்ப்பைத் தெரிவித்தது மாத்திரமல்லாமல், கடந்த 14ஆம் திகதி இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வோல்ஷை அழைத்துப் பேசிய இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித்த ஹேரத் இலங்கை அரசாங்கம் இனப்படுகொலை குறித்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கடுமையாக நிராகரிப்பதாகவும், கனடாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னத்தைக் கடுமையாக எதிர்ப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அதேநேரத்தில், கனடாவின் பிரம்டன் நகரில் தமிழ் இனப்படுகொலையைக் குறிக்கும் முகமாக நினைவுச் சின்னம் ஒன்றை நிர்மாணிப்பது குறித்து, இலங்கை அரசு பலமுறை தனது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்ததாகவும், பிரம்டன் நகர சபையின் இந்த முயற்சியைத் தடுக்குமாறு கனடாவின் மத்திய அரசைக் கேட்டுள்ளதாகவும், இச் செயற்பாடு இலங்கை மற்றும் கனேடிய சமூகங்களுக்கு எதிரானதான ஒன்றாகவே இலங்கை அரசு கருதுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு அவர், 2021, ஏப்ரலில், கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், இலங்கையில் இனப்படுகொலை நடந்ததற்கான அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தலையும் வழங்கவில்லை என்பதனையும், 2006இல் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித்ததையும், 2024 ஜூனில் மீண்டும் இதனை உறுதிப்படுத்தியதையும் உதாரணம் காட்டியிருக்கிறார். அதே நேரத்தில், சர்வதேச அளவில் எந்தவொரு உறுதிப்படுத்தலும் இதுவரை இல்லாத விடயமாக உள்ள இனப் படுகொலையைத் தேர்தல் ஆதாயமாகச் சிலர் பயன்படுத்துவதாகவும் வெளியுறவு அமைச்சர் கூறியிருக்கிறார். இந்நடவடிக்கையானது, இலங்கையின் புதிய அரசாங்கத்தின் தமிழர்கள் தொடர்பான நிலைப்பாட்டையே எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் நடந்த இறுதிக் கட்ட யுத்தத்தின் போது, இனப்படுகொலை நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டானது 2012களுக்குப் பின்னர் வலுப்பெறத் தொடங்கியிருந்தாலும், இதுவரையில் தமிழர்களும் தமிழர்கள் சார் அமைப்புகளும் எதிர்பார்க்கின்ற நிலையை அடைந்து கொள்ளமுடியவில்லை. இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் இனப் படுகொலைக் குற்றச்சாட்டை நிராகரித்தே வருகிறது. எந்த அரசாங்கம் வந்தபோதிலும் இதில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

இந்த இடத்தில்தான், இனப்படுகொலை குற்றச்சாட்டை முற்றிலும் நிராகரித்துவருகின்ற இலங்கை அரசிடம் எவ்வாறு நிதியை எதிர்பார்ப்பது என்ற கேள்வி தோன்றுகிறது. ஒவ்வொரு வருடத்தின் மார் மாதத்திலும், செப்டெம்பரிலும் நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு அமர்வுகளிலும் இது பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டாலும் அதற்குப் பிரயோசனம் ஏற்படவில்லை. இந்த நேரத்தில்தான் கனடாவின் இந்த நடவடிக்கை இலங்கைக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தவகையில்தான், இதன் பிரதிபலிப்பு இன்னும் சிறிது காலத்தில் தெரியும் என்று நம்பவேண்டியிருக்கிறது.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பரப்புவதும், கட்டுக்கதைகளை நினைவுச்சின்னங்களை நிர்மாணிப்பதும் பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவது மட்டுமல்லாமல், அனைத்து சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் நீடித்த அமைதிக்கான இலங்கையின் அயராத முயற்சிகளைச் சீர்குலைப்பவையாக அமையுமென, இலங்கை அரசு உறுதியாக நம்புவதாகத் தெரிவிக்கும் இலங்கை அரசாங்கம் இதுவரையில் மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகள் யாவும் அரசியல் பழிவாங்கல்களாகவும் தமது எதிரிகளை அரசியலிலிருந்து துரத்தும் செயற்பாடுகளுமாகவே இருக்கின்றன.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது தற்போது மக்களிடமிருந்து எதிர்ப்புகளைச் சம்பாதித்துக் கொள்ள ஆரம்பித்திருக்கிறது. ஒரு இடதுசாரிப் போராட்ட மரபில் வந்த அமைப்பு மக்களின் நலன்களில் முக்கிய கவனம் செலுத்தும் என்ற எண்ணத்தில் மக்கள் மாற்றத்தை விரும்பி மேற்கொண்ட செயற்பாட்டுக்கு அரசாங்கத்திடமிருந்து சரியான பிரதிபலிப்பின்மையே அதற்குக் காரணம்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் இதற்கு நல்லதொரு உதாரணமாகும். அரசியல் அரைவேக்காட்டுத்தனத்திற்கும் அரசியல் பழிவாங்கல்களுக்கும் தீனி போடுவதற்காக மக்களைப் பயன்படுத்த முயல்வது நாட்டைச் சரியாகவும், திறமையாகவும் வழிநடத்துவதாகாது என்பதுவே யதார்த்தமாகும்.

இலங்கை அரசாங்கத்தின் உண்மை முகத்தினைக் காணத்துடிக்கும் ஒவ்வொருவரும் மனித உரிமைக்கு மரியாதை, உண்மை, நேர்மை, வெளிப்படைத்தன்மை, திறமைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று கூறிக்கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அதற்காக வடக்கின் காணிகளைக் கையகப்படுத்தும் வர்த்தமானி மீளப்பெறப்பட்டமையை மாத்திரம் கொண்டு முடிவுகளை எடுக்கவும் கூடாது.

அரசியல் பழிவாங்கலிலேயே மிகக் கவனமாகவும் குறியாகவும் இருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பின்னர் எடுக்கவுள்ள நடவடிக்கைகளிலேயே உண்மை முகத்தை நாம் காணமுடியும். பொறுத்திருப்போம். தயாராகவும் இருப்போம்.

## கடிதங்கள்

### காட்டு யானை அட்டூழியம்

பூனாகலை தோட்டத்தில் யானையின் அட்டூழியம் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில்,மக்கள் பதற்றத்தில் காணப்படுகின்றனர்.

கடந்த காலம் முதல் காட்டு யானையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருகின்ற நிலையில், இதுவரையில் அரசாங்கத்தால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், வியாழக்கிழமை(29) அன்று பூனாகலை மத்திய மகா வித்தியாலய கட்டிடம், கடைத்தொகுதி , பிரதேசத்தில் உள்ள இரண்டு கடைத்தொகுதி மற்றும் தற்காலிகமாக நடத்தி வந்த தோட்ட வைத்தியசாலை என்பன யானையால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. மேலும் இதனால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைந்துள்ளது.

யானையின் அட்டூழியத்தைக் கட்டுப்படுத்தி, யானைகளை யால சரணாலயத்திற்கு மாற்ற, உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– இராஜரத்தினம் சுரேஷ்குமார்



# நீதியின் தற்போதைய நிலைப்பாடு என்ன?



நிசன்குமார் கோபிநாத், முதலாம் வருடம், கலைப்பீடம், யாழ்ப்பாணப்ப ல்கலைக்கழகம்.

இந்த உலகில் நடைபெற்ற அனைத்து போராட்டங்களும் மற்றும் கிளர்ச்சிகளும் நீதியை நிலை நாட்டுவதினையே மையப் பொருளாகக் கொண்டது இவ்வுலகில் முக்கிய பேசுபொருளாக நீதி என்பது அடையாளப்படுத்தப்படுகிறது. ஜனநாயக நாடு ஒன்றில் நீதி என்பது ஓர் உயிர் மூச்சாகவும் காணப்படுகின்றது. அது பெரும்பான்மை, சிறுபான்மை எனும் வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் சமமாக நிலைநாட்டப்பட வேண்டிய ஓர் அம்சமாகக் காணப்படுகின்றது.

அந்த வகையில் இலங்கையில் நீதி என்பது எவ்வாறு நிலை நாட்டப்படுகின்றது. பற்றி ஆராய்ந்தால் இலங்கையைப் பொறுத்தவரையில், சர்ச்சைக்குரிய பதில்தான் கிடைக்கும். காரணம் இலங்கை சுதந்திர அடைய முன்பு அன்னியர் ஆட்சிக் காலத்தில் ஓரளவாயினும் அதன் அடிப்படையை அணுகிச் சென்றாலும் சுதந்திரத்திற்குப் பின்னாவது மக்களுக்கு நீதி என்பது முழுமையாக நிலை நாட்டப்படுமா? என்ற நம்பிக்கை ஆரம்ப காலத்தில் காணப்பட்டாலும் நடைமுறையில் ஆட்சிப் போக்கின் மாற்றம் மற்றும் ஆட்சியாளர்களின் நடவடிக்கை என்பவற்றால் நீதி என்பது சரியாக நிலைநாட்டப் படுகிறதா? என்றால் நாம் இல்லை என்று கூற வேண்டும்.

இலங்கை 1948இல் சுதந்திரம் அடைந்தது அதன் பிற்பட்ட காலப்பகுதியில் நீதி என்பது நிலை நாட்டப்பட்டதா ? என்றால் அதுவும் ஒரு கேள்விக்குரிய விடயமாகும். பிரித்தானியர்களிடம் இருந்து நாம் சுதந்திரம் அடைந்தாலும், அவர்களால் வழங்கப்பட்டிருக்கும் அந்த வரையறை நீதியை நிலைநாட்ட முடியாது. ஆகவே, புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கினார்கள்.

1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பு மற்றும் 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு என்பனவற்றினால் நீதி என்பது நிலை நாட்டப்பட்டதா? என்றாலும் அது ஒரு சர்ச்சைக்குரியது சுதந்திரம் அடைந்த பின்னாவது நமக்கு நீதி கிடைக்குமா? என்ற ஒரு ஏக்கம் காணப்பட்டது. ஆனாலும், சுதந்திரம் அடைந்தும் இந்த நீதி என்பது நிலை நாட்டப்பட்டதா? இல்லை. ஆகவே, மக்களுக்கு நீதி தொடர்பான நம்பிக்கை அவர்கள் மனதிலிருந்து மெது மெதுவாக வலுவிழந்து சென்றதையும் முக்கியமானது. எனவே, இவ்வாறு நீதி என்பது சுதந்திரத்திற்குப் பின்னர் நிலை நாட்டப்படாமைக்கு காரணம் என்ன? இவற்றுக்கு எல்லாம் நாம் கடந்த காலங்களை அடிப்படையாகக் கொண்டு நிரூபிக்கப் பல வரலாற்றுச் சம்பவங்களையும் சமூக மாற்றங்களையும் எடுத்துக் காட்ட முடியும்.

1956இல் சிங்கள மொழிச் சட்டம் 1956இல் பிரதமர் எஸ். டபிள்யு ஸ்ரீ. ஆர்.டி பண்டாரநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட சிங்கள மொழிச் சட்டமானது அரசியலமைப்பின் மொழிக் கொள்கையில் தமிழர்களின் உரிமையை மறுத்து இது இலங்கையில் தேசிய சிறுபான்மை மக்களின் பெரிதும் தாக்கம் செலுத்திய இதனால், தமிழர்கள் அரசுத் துறையிலிருந்து பின்னுக்குத் தள்ளப்பட்டனர் இதில் எங்கே நீதி?

ஆகவே, இதில் எங்கே பொதுவான நீதி? இவ்வாறு தான் ஆரம்ப காலங்களில் இருந்தே இந்த சுதந்திரத்திற்குப் பின்னர் இந்த நீதி என்பது ஒவ்வொரு காலகட்டமாக இந்த மக்களை வலுவடையச் செய்து நீதி என்பது சமமாக நிலைநாட்டப்பட வில்லை. அது பெரும்பான்மைக்குச் சாதகமாகவும் சிறுபான்மையினருக்குப் பாதகமாகவே நிலைநாட்டினர். இது தொடர்பாக மக்கள் ஆர்ப்பாட்டங்கள், பல கிளர்ச்சிகளுக்கு மத்தியில் தங்களுடைய நீதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை இருந்தது. சில சந்தர்ப்பத்தில் அந்த கிளர்ச்சிகளை அவர்கள் மேற்கொண்டு அவருக்கு இயலாத சந்தர்ப்பத்தில் அந்த கிளர்ச்சியை கைவிட்டு இன்னும் அவர்களுக்கு நீதி என்பது ஒரு கிடைக்காத ஒரு புதிராகவே காணப்படுகின்றது.

உரிமை மறுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி எங்கே?

இலங்கை போர்க் காலத்தில் மற்றும் அரசு செய்த குற்றங்கள் தொடர்பாக அரசு எவ்வித சமச்சீரான விசாரணைகளையும் நடத்தவில்லை. அத்துடன் போர்க்காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை எந்த ஒரு நீதியான தீர்ப்பையும் அல்லது நீதியான ஒரு செயல்பாட்டையும் அவர்களுக்கு வழங்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமை என்ன? அரசு ஏன் அவற்றை விசாரணை செய்யவில்லை. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அவர்கள் பற்றிய கோரிக்கைகள் ஏன்? இன்னும் தீர்க்கப்படவில்லை. அவர்களுடைய கேள்விக்கு அரசு ஏன் பதில் அளிக்க மறுக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நீதி எங்கே? "ஓர் அரசியல் வாழ்கின்ற மக்கள் தங்களுடைய நீதியை அந்த தேசிய அரசிடமே பெற்றுக் கொள்ள முடியும் அதை வேறொரு நாட்டில் சென்று பெற்றுக் கொள்ள முடியாது என்பதை அரசு தெளிவாக அறிந்திருக்க வேண்டும்"

ஆகவே, நீதி என்பது அனைவருக்கும் சமமாக சீர்படுத்தி நிலை நாட்டப்பட வேண்டியது. அது ஏற்றத்தாழ்வான பண்பாக காணப்படக் கூடாது. என்பது முக்கியமானது.

ஒவ்வொரு தடவையும் மக்கள் தேர்தலில் வாக்களிக்கும் பொழுதும் நமக்கான நீதி இந்த அரசாங்கத்தால் சரி நிலை நாட்டப்படும் என்ற நம்பிக்கையிலே வாக்களிக்கிறார். ஆனால், ஆட்சி அமைக்கின்ற அரசாங்கமோ நீதியை நிலைநாட்டுவதைச் சிறிதும் கவனத்திற்குக் கொள்வதில்லை.

ஆகவே, நீதியை நிலைநாட்ட வேண்டியது ஓர் அரசின் முக்கிய கடமை . ஆனால், இந்த கடமையை அரசு ஏன் புறக்கணித்துச் செல்கிறது இதற்குக் காரணம் என்ன?

கொட்டாஞ்சேனையில் பாடசாலையில் மாணவி ஒருவர் பாடசாலை ஆசிரியரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியமையால் அந்த மாணவி அதிர்ச்சி தாங்க முடியாமல் தன்னுயிரை மாய்த்துச் செய்து கொண்டார். இந்த மாணவி தன் உயிரை மாய்த்துக் கொண்டதன் பின்னர் அது தொடர்பாக ஆசிரியர் ஏன்? கைது செய்யப்படவில்லை பல போராட்டங்களுக்குப் பின்பு தான் அந்த ஆசிரியர் பதவி நீக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார். ஆகவே, நீதி என்பது ஏன் விரைவாகச் செயல்படுத்தவில்லை. இதற்குப் பின்னால் அமைந்துள்ள அரசியல் தலையீடு என்ன? இந்த நீதியை நிலை நாட்டுவதற்கு இந்த சட்டம் ஏன் உறுதியாக அமைகின்றதாக இல்லை.

இன்று பல்வேறு பிரச்சனைகளுக்கான நீதியை மக்கள் உடனடியாக பெற முடியாத ஒரு சூழ்நிலை காணப்படுகிறது பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியிலும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் பல கோரிக்கைகளுக்கு மத்தியிலுமே இந்த நீதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் ஆகவே நீதி என்பது இவ்வாறு மக்கள் தனது எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் மேற்கொண்டு தான் நீதியைப் பெற வேண்டிய சூழ்நிலைக்கு உருவாக்கியது யார்?



இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையில் உதவி விரிவுரையாளர் யமீனா கிருஷ்ணசாமியிடம் வினவிய போது,
நீதி நிலைநாட்டப்படாமைக்கான முக்கிய காரணம் அரசியல் தலையீடுகளாகும் இலங்கையை பொறுத்தவரையில், 1978இல் அரசியலமைப்பு இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசாக மாற்றிய அரசியலமைப்பானது நிறைவேற்று ஜனாதிபதி முறையை இலங்கைக்கு அறிமுகம் செய்தது. இதன் விளைவாக நீதித்துறை தொடர்பான மேலோங்கிய அதிகாரம் நீதித்துறை சுயாதீனத்தை பாதித்தது. இதற்கு உதாரணமாக மஹிந்த ஷ ஆட்சிக்காலத்தில் சிரானி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து பணியிறக்கம் செய்து மொஹான் பீரிஸை நியமனம் செய்தமை, 1999இல் பிரதம நீதியரசர் பீ.பீ.எஸ்.த.சில்வா ஓய்வு பெற்றதன் பின்னர் சிரேஷ்ட நீதிபதியான மார்க் பெர்னாந்துவை கருத்தில் கொள்ளாது நீதிபதி சரத் என் சில்வாவை நியமித்தமையும் முக்கியமானது. உயர் நீதிமன்ற நீதிபதிகள் இராணுவ தலையீடு மற்றும் அமைச்சர்களின் தலையீடு காரணமாக நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து செல்கிறது முக்கியமானது.

நீதிமன்ற கட்டமைப்பில் காணப்படும் ஒரு குறைபாடுகளும் முக்கியமான பிரச்சினையாகும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அவர்களது உறவுகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இன்றும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் நிலையிலேயே காணப்படுகிறது. ஆகவே, அநீதிக்கு உட்பட்ட மக்களுக்கான நீதி பல வருடங்கள் கடந்தும் அதற்கான நீதியைப் பெற முடியாத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது.

சாதாரண ஏழைகளுக்கு நீதியை பெற முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. நீதிமன்றங்களில் வழக்குகள் நடத்துவது செலவான ஒன்று. வழக்கறிஞர்களுக்கான கட்டணம், நீதிமன்றக் கட்டணங்கள், சான்றுகளுக்கான செலவுகள் போன்றவை ஏழைகளுக்கு மிகப் பெரிய சுமையாக இருக்கிறது. அவற்றை ஏற்க இயலாத காரணத்தால், அவர்கள் வழக்குகளைத் தொடங்க முடியாமல் விடுகின்றனர். பொதுமக்களுக்கு நீதித்துறை தொடர்பான அறிவு இல்லாமையும் முக்கிய காரணமாகும்.

பொதுமக்கள் பெரும்பாலும் இந்த அமைப்பின் செயல் முறை அதன் பயன்பாடு மற்றும் தங்களுக்குரிய சட்ட உரிமைகள் பற்றிய அறிவில்லாமல் இருக்கின்றனர். இதுவே நீதியை நிலைநாட்டுவதில் ஒரு முக்கியமான தடையாக மாறுகிறது. மிகவும் முக்கியமான ஒரு காரணம் கல்வி மற்றும் சட்ட விழிப்புணர்வு பற்றாக்குறை. கிராமப்புறங்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களில் வாழும் மக்கள், நீதிமன்றம், வழக்கறிஞர்கள், காவல்துறை ஆகியவற்றை எப்படி அணுக வேண்டும். ஒரு நியாயமான வழக்கு என்ன? உங்களுக்கெதிராக அநீதியான செயல் நடந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதையே அறியாமல் இருக்கின்றனர். இதனால், அவர்கள் தங்களது உரிமைகளைப் பாதுகாத்து நீதி கேட்க முடியாமல் போகிறார்கள்.

சர்வதேச சட்டங்கள் தனியாகவே நீதியை நிலைநிறுத்த முடியாது. காரணம் அதற்கு உள்ளூர் அரசாங்கங்களின் ஒத்துழைப்பு, அரசியல் தூண்டுகோல், மற்றும் சர்வதேச ஒருமித்த நடவடிக்கைகள் தேவை. இவை இல்லாததால் தான் இலங்கையில் நீதியமைப்பு ஒரு 'உள்நாட்டுப் பிழை' மட்டும் அல்ல, ஒரு 'சர்வதேச தோல்வி'யுமாக விளங்குகிறது.

மேலும், ஒருவரின் உரிமை மீறப்படும் போது, அதற்கான நியாயமான தீர்வும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையும் வழங்கப்பட வேண்டும். இல்லையெனில், மக்கள் மனங்களில் நம்பிக்கை குலைந்து விடும். நீதி நிலை நிறைவதன் மூலம் தான் மக்கள் ஒருவரை ஒருவர் நம்பி வாழ முடிகிறது. அரசில் நம்பிக்கை வைக்க முடிகிறது. அந்த நம்பிக்கையே ஒரு நாட்டின் நிலைத்த முன்னேற்றத்திற்கு அடிப்படையாகிறது. நீதியின் வெளிச்சம் இல்லாத இடத்தில் இருட்டும், அச்சமும், அநீதியும் அதிகரிக்கும். எனவே, நீதியை நிலைநிறுத்துவது என்பது ஒரு அரசின் விருப்பத் தேர்வல்ல, அது ஒரு நாகரிகமான சமூகத்தின் உயிர் சுவாசமாக இருக்க வேண்டும். என்பது முக்கியமானது.

# டிஜிட்டல் பொருளாதாரம் ஒரு கனவு மட்டும் தானா?



ச.சேகர்






நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவதில் நிதி அமைச்சு பெருமளவில் கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நிதி அமைச்சர் எனும் வகையில் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மேற்கொண்ட உரையின் போது தெரிவித்திருந்ததை மறந்திருக்கமாட்டீர்கள். 2030இல் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் பெறுமதி 15 பில்லியன் அமெரிக்க டொலர்களை எய்தும் எனவும், மொத்த தேசிய உற்பத்தியின் 12 சதவீதமாக அமைந்திருக்கும் எனவும் அரசாங்கம் எதிர்வுகூறியுள்ளது. இந்த ஆண்டில் டிஜிட்டல் மாற்றத்துக்கான மூலோபாய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக அரசாங்கம் 3 பில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளது. டிஜிட்டல் பொருளாதார அதிகாரசபை ஒன்றை நிறுவி, நாடு பணப்புழக்கமில்லாத பொருளாதாரத்தை நோக்கி நகர்வதை கண்காணிக்கும் பணிகளை மேற்கொள்ள பணிக்கவுள்ளதாகவும் பிரேரித்திருந்தது.

நாட்டின் பொருளாதார செயற்பாடுகளினுள் பணப்புழக்கமில்லாத பரிவர்த்தனைகளை முன்னெடுப்பது என்பது இந்த டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்கும் பரந்த நடவடிக்கையின் ஒரு முக்கிய பிரிவாக அமைந்துள்ளது. அரசாங்கத்தின் நோக்கம், இந்த பணப்புழக்கமில்லாத பொருளாதாரம் உருவாக்கப்படும் நிலையில், வரி வரம்பினுள் வராமல் இருப்பவர்களை, அந்த வலையினுள் கொண்டு வர முடியும் என்பதுடன், சட்ட விரோதமான நிதிசார் செயற்பாடுகளை இல்லாமல் செய்யக்கூடியதாக இருக்கும் என்பதுடன், அவற்றினூடாக இலங்கையின் பொருளாதார உறுதிப்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் பங்களிப்பு வழங்குவதாகவும் அமைந்திருக்கும் என்பதாகும். டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் வகையில் அரசாங்கத்தினால் பெப்ரவரி மாதத்தில் GovPay எனும் ஒன்லைன் பரிவர்த்தனை கட்டமைப்பு அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. நாட்டின் அரசாங்க சேவைகளை டிஜிட்டல் மயமாக்கும் பணிகளின் ஆரம்ப நிலையாக இது அமைந்திருந்தது. GovPay இன் அறிமுகத்துடன், அரசாங்க சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான டிஜிட்டல் கொடுப்பனவுகள் இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்பட்டதுடன், சுமார் 100 அரசாங்க முகவர் அமைப்புகள் இந்த ஒன்லைன் கட்டமைப்பில் இணைந்து கொள்ளும் என எதிர்வுகூரப்பட்டிருந்தது. நாட்டு மக்கள் மத்தியில் பணப்புழக்கமில்லாத கொடுப்பனவு முறைகளை ஊக்குவிப்பதற்குப் பல நடவடிக்கைகளை அரசாங்கம் அறிமுகம் செய்து முன்னெடுத்த போதிலும், வரி வலையினுள் தாம் சிக்கிவிடுவோமோ என்ற அச்சத்தினாலும், மேலும் பல தடங்கல்களாலும் இந்தப் பணப்புழக்கமில்லாத கொடுப்பனவு முறைகளுக்கு முழுமையாக மாற மக்கள் தயக்கம் காண்பித்து வருவதை அவதானிக்க முடிவதுடன், பணப்புழக்கமில்லாத பரிவர்த்தனைகளில் காணப்படும் சௌகரியமும் மறைக்கப்பட்டுவிடுகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக, இலங்கை மத்திய வங்கி வெளியிட்டிருந்த 2024 மூன்றாம் காலாண்டுக்குரிய கொடுப்பனவு தகவல் வெளியீட்டில், நாட்டில் புழக்கத்திலுள்ள நாணயத்தின் பெறுமதி ரூ. 1.33 ட்ரியல்லயனாக அதிகரித்துள்ளதாகவும், இது 19.7 சதவீத வருடாந்த அதிகரிப்பு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பெருமளவானோரை நேரடியான வரி அறவீட்டு வலையினுள் கொண்டு வரும் அரசாங்கத்தின் முனைப்புடனான செயற்பாடுகளால், டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளுக்கு மாறாமல், நாணயங்களைப் பயன்படுத்தி பரிவர்த்தனைகளை மேற்கொள்வதில் மக்கள் நாட்டம் காண்பிக்கின்றனர் என பலர் ஊகம் வெளியிட்டுள்ளனர். டிஜிட்டல் பரிவர்த்தனைகளைப் போலன்றி, நாணய பரிவர்த்தனைகளைக் கண்காணிப்பது கடினமானது. நாணயப் புழக்கத்தினுடான பரிவர்த்தனைகளை அளவிடுவது வரி முகவர் அமைப்புகளுக்கு இயலாத காரியமாகும். அண்மையில் வங்கி வைப்புகளின் மீது வழங்கப்படும் வட்டியில் அறவிடப்பட்ட தக்க வைக்கும் வரி 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்பட்டமையும் இந்த தயக்கத்துக்கும், பின்னிற்பதற்கும் ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

மேலும், நாட்டில் விற்பனை மற்றும் சேவை நிலையங்களுக்கு கார்ட்களினூடாக வாடிக்கையாளர்கள் மேற்கொள்ளும் கொடுப்பனவுகளின் மீது மேலதிகமாக 3.5 சதவீத கட்டணத்தை அறவிடுவது சட்டவிரோதமான செயல் என இலங்கை மத்திய வங்கி பல அறிவித்தல்களை வழங்கியிருந்த போதிலும், தொடர்ந்தும் அந்த சட்டவிரோதமான செயற்பாடுகளைப் பல விற்பனை மற்றும் சேவை நிலையங்கள் பின்பற்றி, வாடிக்கையாளர்களை நாணயத்தாள்களை பயன்படுத்தி பரிவர்த்தனைகளை மேற்கொள்ளத் தூண்டுகின்றமையும் நாட்டினுள் பணப்புழக்கமற்ற சமூகத்தை ஏற்படுத்துவதற்குப் பெரிதும் தடங்கலாக அமைந்துள்ளது. சிறியளவிலான வர்த்தகர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் பணத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் பரிவர்த்தனைகளையே எதிர்பார்க்கின்றனர். குறிப்பாக, வாகன சவாரி வாடகை சேவை வழங்கும் பிரபல போக்குவரத்து சேவை செயலிகளில் தம்மைப் பதிவு செய்து கொண்டு சேவைகளை வழங்கும் சாரதிகள் கூட கார்ட் கொடுப்பனவுகளை ஏற்க மறுக்கும் செயற்பாடு இலங்கையில் வழமையானதாக அமைந்துள்ளது.

மேலும், அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டிய, அரச துறையைச் சேர்ந்த சில நிறுவனங்கள் கூட இந்த டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கிய நகர்வுக்குத் தடங்கலாக அமைந்துள்ளன. குறிப்பாக, அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட GovPay ஒன்லைன் கட்டமைப்பினூடாக, சாரதிகளுக்கு வீதி விதிமுறைகளை மீறும் பட்சத்தில் அதற்கான போக்குவரத்து பொலிஸாரின் அபராதங்களை ஒன்லைனில் செலுத்தும் வசதி அறிமுகத்துக்கு, தபால் சேவை சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தன. இந்த ஒன்லைன் முறைமைக்குத் தண்டம் செலுத்துவது மாறினால், தபால் திணைக்களத்துக்கு ரூ. 600 மில்லியனிலிருந்து ரூ. 800 மில்லியன் வரை வருடாந்தம் இழப்பு ஏற்படும் என குறிப்பிட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்தத் திட்டம் பரீட்சார்த்த ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போதிலும், நாட்டின் அனைத்து பாகங்களினும் அறிமுகம் செய்யப்படவில்லை. அதற்கு இவ்வாறான எதிர்ப்புகளும் காரணமாக அமைந்திருக்கக்கூடும். உண்மையில் இந்தத் திட்டம் நாட்டின் சகல பாகங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தால், அரசாங்கத்தின் வருமானம் அதிகரித்திருக்கும். தபால் திணைக்களமும் அரச நிர்வாகத்தின் கீழ் அமைந்தது தானே.

மற்றுமொரு பாரிய பிரச்சனையாக, நாட்டில் தற்போது காணப்படும் தொலைத்தொடர்பால் சேவை வழங்குநர்களின் புரோட்பான்ட் வலையமைப்பு சேவை மிகவும் மோசமானதாக அமைந்துள்ளன. விசேடமாக முன்னணி சேவை வழங்குநர்களின் சமூக வலைத்தளங்களுக்குச் சென்று அதில் பதிவிடப்பட்டிருக்கும் கருத்துகளைப் பார்த்தால் வலையமைப்பின் தரம் எந்தளவு மோசமானதாக அமைந்துள்ளது என்பது புலனாகும். இவ்வாறிருக்கையில், டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்வது, டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு மாறுவது என்பது எந்தளவுக்கு சாத்தியமாகும். 5G இருக்கட்டும், முதலில் 3G மற்றும் 4G வலையமைப்பை சீராக வழங்கவும் போன்ற பல கருத்துகள் பாவனையாளர்களிடமிருந்து வெளிப்பட்டுள்ளன. டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு மாறுவது என்பது, கிராமத்தவரும் அதற்கு தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். குறிப்பாக, தற்போதைய பொருளாதார சூழலில் அனைவரிடமும் ஸ்மார்ட்ஃபோன் காணப்பட்டாலும், அவற்றின் தரம், பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக அமைந்துள்ளது. அத்துடன், நகர்ப்பகுதிகளுக்கும், கிராமப்புறங்களுக்குமிடையே டிஜிட்டல் இடைவெளி ஒன்றும் பெரியளவில் காணப்படுகிறது. டிஜிட்டல் பொருளாதாரம் என்பது பலரின் கனவாக அமைந்திருந்த போதிலும், அதை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு, அரசியல், சமூக மற்றும் பொருளாதார சவால்கள் பலதை கடக்க வேண்டியுள்ளது.

அனுர அரசாங்கம் அறிமுகம் செய்த GovPay டிஜிட்டல் கொடுப்பனவு கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கத்தின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களையும் முதலில் இணங்கச் செய்து ஒரு வழிக்கு கொண்டு வர வேண்டும்.



### சம்பியன்ஸ் லீக்:

# பரிஸ் ஸா ஜெர்மைன் சம்பியனானது




ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் சம்பியனானது.

ஜேர்மனியில் ஞாயிற்றுக்கிழமை(01) அதிகாலை நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனுடனான போட்டியில் 5-0 என்ற கோல் கணக்கில் வென்றே முதல் தடவையாக பரிஸ் ஸா ஜெர்மைன் சம்பியனானது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக, டிசையர் டூவே இரண்டு கோல்களையும், அஷ்ரஃப் ஹக்கிமி, கிவிச்சா கவாராட்ஸ்கெலியா, சென்னி மயிலு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



## நாயரின் இரட்டைச் சதத்தையடுத்து இந்தியப் பந்துவீச்சாளர்கள் தடுமோற்றம்

இங்கிலாந்து லயன்ஸ் அணியுடனான போட்டியில் இந்திய ஏ அணியின் பந்துவீச்சாளர்கள் தடுமாறுகின்றனர்.

கன்டர்பெரியில் வெள்ளிக்கிழமை(30) ஆரம்பமான குறித்த முதலாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இந்தியா, கருண் நாயரின் 204, துருவ் ஜுரேலின் 94, ஸஃப்ராஸ் கானின் 92, ஹர்ஷ் டுபேயின் 32 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 557 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஜொஷ் ஹல் 3, ஸமன் அக்தர் 3, எடி ஜக் 2, அஜீட் சிங் டேல் 1, றெஹான் அஹ்மட் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து, இரண்டாம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. டொம் ஹெய்ன்ஸ் 103 ஓட்டங்களுடனும், மக்ஸ் ஹொல்டன் 64 ஓட்டங்களுடனும் களத்தில் ஆட்டமிழக்காதுள்ளனர். முன்னதாக எமிலோ கே 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பந்துவீச்சில் அன்ஷுல் கம்போஜ், ஹர்ஷ் டுபே ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.



## சவூதி செல்லும் மெஸ்ஸி?

சவூதி அரேபியாவுக்கு லியனல் மெஸ்ஸி செல்வது குறித்த ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்க கழகமான இன்டர் மியாமியுடனான 37 வயதான மெஸ்ஸியின் ஒப்பந்தமானது இவ்வாண்டு முடிவுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பெரிய சவூதி அரேபியக் கழகங்களான அல் ஹிலால், அல் நஸார், அல் இத்திஹாட், அல் அஹ்லியில் 75 சதவீதமான பங்குகளைக் கொண்டுள்ள சவூதி பொது முதலீடு நிதியமானது அண்மையன நாள்களில் மெஸ்ஸியின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

### மே. தீவுகளுக்கெதிரான தொடரிலிருந்து

## ஒவெர்ட்டன் விலகல்



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான எஞ்சிய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடரிலிருந்து இங்கிலாந்தின் சகலதுறைவீரரான ஜேமி ஒவெர்ட்டன் விலகியுள்ளார்.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியின்போது வலதுகையின் சின்ன விரலை முறித்துக் கொண்ட பின்னரே இவ்வாறு விலக வேண்டியேற்பட்டுள்ளது.

ஒவெர்ட்டனுக்காக குழாமில் வேறெவரும் இணைத்துக் கொள்ளப்படாத நிலையில் வேகப்பந்துவீச்சாளர்கள் மத்தியூ பொட்ஸ், லுக் வூட் ஆகியோரில் ஒருவர் அல்லது சுழற்பந்துவீச்சாளர் டொம் ஹாட்லி அவரை அணியில் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.



## டொட்டென்ஹாம் செல்லும் சனே?

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான லெரோய் சனேயைக் கைச்சாத்திடுவதற்கான போட்டியில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் முன்னிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, மியூனிச்சில் 29 வயதான சனே தொடருவதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

இந்நிலையில், துருக்கி, சவூதி அரேபியாவிலுள்ள கழகங்களும் சனேயைக் கைச்சாத்திட முயல்கிறமை குறிப்பிடத்தக்கது.

சூடான்

### சூடானின் நிலைமை

# கைமீறி போனது



நிலைமை கைமீறிப் போனதால், சூடானில் சுமார் 10 இலட்சம் பேர் வாந்திபேதியால் பாதிக்கப்பட வாய்ப்பு இருப்பதாக, ஐ.நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே, இந்த நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாக, சுகாதாரத்துறை மந்திரி ஹைதம் இப்ராகிம் தெரிவித்துள்ளார்.

தற்போது சூடானில், புதிய வகை கொலரா தொற்று பரவல் தலைவிரித்தாடுகிறது. தலைநகர் கார்டூம் மற்றும் ஓம்டுர்மனில் இந்த பாதிப்பு அதிகம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் கோர்டோபான், சென்றார், காசிரா உள்ளிட்ட பல மாகாணங்களில் காலரா தொற்று வேகமாகப் பரவி வருகின்றது.

அதன்படி, கடந்த 6 மாதங்களில் சுமார் 7, 700 பேர் கொலரா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் ஆவர். தண்ணீரால் பரவும் இந்த காலரா தொற்று அதிக வயிற்று வலியை ஏற்படுத்தி உயிரையே பறிக்கும் அபாயம் உடையது.

ஏற்கெனவே நிலவும் உள்நாட்டுப் போருக்கு மத்தியில் கொலரா தொற்றும் வேகமெடுத்ததால் அரசாங்கத்துக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 172 பேர் கொலரா தொற்றால் உயிரிழந்துள்ளனர்.



நைஜீரியா

### நைஜீரியாவில் வெள்ளம்:

## 3,000 பேர் புலம்பெயர்வு

நைஜீரியாவின் மொக்வா நகரில் ஏற்பட்ட வெள்ளத்தால், 3,000க்கும் மேற்பட்டோர் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

குறித்த பகுதியில், கடந்த 2 நாட்களாக அடைமழை பெய்து வருவதால், நகர் முழுவதும் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது.

இதில் சிக்கி 151 பேர் உயிரிழந்து உள்ளனர். 11 பேர் காயமடைந்து உள்ளனர். 3,000க்கும் மேற்பட்டோர் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

தொடர் மழையால், பொதுமக்களின் இடுப்பு வரை வெள்ளநீர் சூழ்ந்து காணப்படுகிறது. ஏறக்குறைய 5 மணிநேரத்தில், வெள்ளம் அதிகரித்து 500க்கும் மேற்பட்ட வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால், மக்களை மீட்கும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. 2 வீதிகள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. 2 பாலங்கள் உடைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து, அந்நாட்டு ஜனாதிபதி போலா தினுபு, பலியானவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து உள்ளதுடன், நிவாரண பொருட்களையும், தற்காலிக புகலிடம் வழங்கும் உதவியையும் காலதாமதமின்றி உடனடியாக செய்யும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்கா

### விபத்துக்குள்ளான லொறியில் இருந்து

## தப்பிய 25 கோடி தேனீக்களால் பரபரப்பு

லொறி ஒன்று விபத்துக்குள்ளானதில், மாறி கொள்கலனுக்குள் இருந்த 25 கோடிக்கும் அதிகமான வளர்ப்பு தேனீக்கள் பறந்து சென்ற சம்பவம், அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டன் மாகாண நெடுஞ்சாலை ஊடாக,தேனீ பண்ணைக்குச் சொந்தமான மாறி ஒன்றில் 25 கோடிக்கும் அதிகமான வளர்ப்பு தேனீக்கள் கொண்டு செல்லப்பட்டன.

கனடா எல்லையில் உள்ள வாங்டாம் அருகே சென்றுகொண்டிருந்த போது, குறித்த லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்து, நிலைதடுமாறி வீதியோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் லொறியின் கொள்கலனுக்குள் அடைத்து வைக்கப்பட்டு இருந்த தேனீக்கள் தப்பிப் பறந்து சென்றுள்ளன. இதனையடுத்து அந்த வீதி மூடப்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

தகவலின்பேரில் அங்கு விரைந்த மீட்புப் படையினர் தப்பியோடிய தேனீக்களை மீட்க முயன்று வருகின்றனர். இதன் காரணமாக அங்கு வசிக்கும் மக்கள் கவனமாக இருக்குமாறு உள்ளூர் நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.





இந்தியா

### இந்தியாவில்

## தீவிரமடையும் கொரோனா

இந்தியாவில் இதுவரை 3,395 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சனிக்கிழமை (31) ஒரே நாளில் மட்டும் 685 பேருக்கு தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டு உள்ளதாகவும் மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதில் கேரளாவில் 1,336 பேரும், மராட்டியத்தில் 467 பேரும், டெல்லியில் 375 பேரும், குஜராத்தில் 265 பேரும், கர்நாடகாவில் பேரும் 234, மேற்கு வங்காளத்தில் 205 பேரும், தமிழ்நாட்டில் 185 பேரும், மற்றும் உத்தரப்பிரதேசத்தில் 117 பேரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில், கொரோனா தொற்றால் 4 பேர் உயிரிழந்துள்ளனர். டெல்லி, கேரளா, கர்நாடகா மற்றும் உத்தரப்பிரதேசத்தில் தலா ஒருவர் வீதம் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா பரவலை எதிர்கொள்ள அனைத்து மாநிலங்களும் தயார் நிலையில் இருக்க மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது. மேலும் அரசு மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் படுக்கைகள், ஒக்சிஜன், மருந்துகள் கையிருப்பு இருப்பதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியா

### அடைமழையில் சிக்கிய

## 500 சுற்றுலா பயணிகள்



இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் பெய்து வரும் இடைவிடாத அடைமழையால் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கித் தத்தளிக்கின்றன.

குறிப்பாக சிக்கிம் மாநிலத்தில் பெய்யும் இடைவிடாத மழையால், மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் முக்கிய சாலை தடைப்பட்டதால் 500க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் சிக்கியுள்ளனர்.

இதற்கிடையில் மங்கன் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (30) இரவு 11 பேருடன் சென்ற சுற்றுலா வாகனம் டீஸ்ட்லா ஆற்றில் மூழ்கியது. இதில் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் காயம் அடைந்தனர். 8 சுற்றுலாப் பயணிகள் மாயமானார்கள்.

அவர்களைத் தேடும் பணி அடைமழை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இரண்டு நாட்களுக்கு வடக்கு சிக்கிம் பகுதிகளுக்குச் சுற்றலாப் பயணிகள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 02, ஜூன் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.